

உ

கடவுள் துணை.

# கலியுகச்சிந்து.

இதனுள் கடன்பத்திரம், கலிகாலக்கண்ணாடி
இரண்டும் அடங்கியுள்ளன.



இவை
சென்னைப் புரசை
நாராயணசாமிப்பிள்ளையவர்களது
நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டன.

விலை] 1907. [பை 6.

16, சரவணப்பெருமாள் முதலிவீதி,
புரசை, சென்னை.

உ

கடவுள் துணை.

# கலியுகச்சிந்து.

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

காலத்தைப்பாராய்—கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக்கேளாய்

அநுபல்லவி

காலத்தின்கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியனே வேலொத்தவிழியாளே (கால)

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயையோவேழைகள் புழுகாய்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல் வாரண்டாய்த்திரியுது
வாங்கியகடனுதான கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள்-புரட்டாசிஐப்பசிகூட-பொளக்குதேவெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்ப்பறக்குது
காடுமேடுகளெல்லாங் கட்டுதிட்டமாச்சுது
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்போச்சு (கால)

மழையோமழைபோவென்று மானம்பார்க்கலாச்சி
மாடு ஆடுகள்பேச்சி புல்லுக்கலையலாச்சி
தரையுமுலர்ந்துபோச்சி தண்ணீர்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுப்போச்சி-தாயார்தமக்கைபோல்-பெண்தேடலாச்சி
கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தை காத்துயிருக்கலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் கூத்துக்குமணையாச்சி
சொல்லுமிங்கிலீஷுக்கு நல்லபிழைப்பாச்சி (கால)

காட்டில்மழையாச்சி சழனியுலர்ந்துபோச்சி
தலப்பைகாத்துக்கோலே பிரப்பிற்சொருகலாச்சி
போட்டவிதைகளெல்லாம் பொரியாய்ப்பறந்துபோச்சி
பிள்ளைகுட்டிகளெல்லாங் கஞ்சிக்கலையலாச்சி
மண்மாரியாச்சி-நாட்டுப்புறங்களெல்லாம்-கண்மாரியாச்சி

இருந்தவிரைகளெல்லாம் ஏனுவிரைத்தோமென்று
இரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுஎடுவாயிதா பிடிபிடி ஆளென்று
ஏழெட்டுப்பேருக வீட்டைவளைத்துக்கொண்டு
ஜப்திகளாச்சி-ஆடுமாடுகளெல்லாம்-ஏலமாய்ப்போச்சி

வீட்டுவரிவந்து வாசக்கால்தூக்குது
வியாபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி-நட்டுமுட்டுகளெல்லாம்-வியாபாரமாச்சி
களிதின்றுபிழைக்கவும் கேலிகுமுறைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது
கூலிக்குப்போனாலும் லஞ்சங்களகேழ்க்குது
கொடுத்தாலும்நாலாம்நாள் அடித்துத்துறத்துது(கால)
சீமைசீட்டிகளெல்லாம் சிறிப்பாய்சிரித்துப்போச்சி
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்றாய்ப்போச்சி
பெருமையாய்பிழைத்தவர் பிழைப்புக்கிழுப்பாய்போச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேற்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி-சர்வகுலங்களும்-நடைதப்பிப்போச்சி
அந்தணர்குலத்துடன் ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பறணைமேற்றூங்குது
பணமென்றாற்பிணங்கூட வாய்சொந்சநதிறக்குது
பாசுபண்ணவர்பேச்சு வேலைக்குதகொங்குது(கால)
தாயொப்பிவந்தாலும் சேயன்புணைரலாச்சி
தம்பித்தமயனபெண்டை தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் எங்குமபெருத்துப்போச்சி
நாயகனொப்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுனைகெட்டுப்போச்சி-பணமைபெருமையாச்சி-ஜாதிகள்போச்சி
பெலத்தவுத்தியோகத்தைப் பார்க்கமனைவிபாச்சி
படுத்துயிருக்கும்போதே அடுத்துப்புணைரலாச்சி
கலங்கிவேசையரெல்லாம் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவிசொல் விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி-தகப்பன்பிள்ளையுங்கூட-வழக்காடலாச்சி
பூமியிற்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சி
பூர்ணமாய்கெஞ்சாடம் அடித்துமயங்கலாச்சி
சாமியென்றவருக்கு பேர்களநிகளமாச்சி
சாம்பலைப்பூசவுந் தெரியாதவர்க்குசீச்சி(கால)
கடுகடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தகடனைக்கேட்டால் கோட்டுக்கிழுக்கலாச்சி
கொஞ்சமேமாந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி
அஞ்சாமற்போச்சி-பெரியோர்சிறியோரென்ற-அளவெல்லாம்போச்சி
அழுத்தமுண்டைகள்பிள்ளை பெற்றுவளர்க்கலாச்சி
அப்பனையாநதாக்கால் சாயைப்புணைரலாச்சி

திருட்டுப்பிள்ளைகள்பெற்று முறித்துவெறியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்தொருவராச்சி(கால)
கட்டிக்கொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றும்நாள் பெற்றுமுறிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுப்போச்சி
மாதாபிதாபேச்சி தலையைக்குனியலாச்சி
அதிகமாய்ப்போச்சி-குடிகெட்டிமுண்டைகள்-அணியணியாச்சி
பெண்டுகள்வியாபாரஞ் செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெளுக்கக்கட்டி பிணைத்தித்திரியலாச்சி
சண்டைசாடிகளெல்லாம் பணத்தையிறைக்கலாச்சி
சாமிக்குக்கொடுப்பவர் தரையினில்மருந்தாச்சி(கால)
பஞ்சாங்கப்படிப்பெல்லாம் பஞ்சாய்பறந்துபோச்சி
பறைச்சிக்குபணந்தந்து சிறப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமறபறச்சோற்றில் அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லாம் அழுதுபுலம்பலாச்சி
குலங்கெட்டுப்போச்சி-அந்தணராலேயே-குடிகெட்டுப்போச்சி
துரைக்குப்பிறந்தவன்போல் டொப்பிசட்டைகளாச்சி
ஜோடுஞ்செருப்பும்போச்சி பூட்சுதூக்கலாச்சி
அடுப்பங்கரையிற்கூட இங்கிலீஷ்பேசலாச்சி
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சி
சீமைதுரைகளெல்லாம் காவியுடுத்தலாச்சி
சாதித்தமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி கருப்புங்குடியாய்ப்போச்சி
கண்டவிடங்களெல்லாம் பைபிலிறைச்சலாச்சி
வேதங்கள்போச்சி-கிறிஸ்தவர்கூச்சலே-வேடிக்கையாச்சி
கோயில்குளங்களெல்லாம் குட்டிசுவராய்ப்போச்சி
குடியதிகமாச்சி கடைகள்பெருத்துப்போச்சி
கிராமதேவிகளெல்லாங் கடையாய்பறந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி
கலியுகநடத்தைக்கு கடவுளுஞ்சிரிக்குது
காலத்திற்கேத்தாப்போல் மாரிகள்வருகுது
குளிர்காய்ச்சலிற்பாதி கூண்டோடேசாய்க்குது
குந்தியிருந்தபேரை வாந்தியில்மடக்குது
பேதியிற்பாதி-இப்படிமடிந்தும்-துள்ளுதேகூவி-ஐயோ
இன்றைக்கிருப்பவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த ஊர்க்குந்தெரியுமிது
ஏனோகெருவங்கொண்டு வீணாகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரஞ்சாவுது(கால)
பணங்கையிலில்லையென்று பொய்சாட்சிசொல்லாதே
பரதேசியையுமேற் புலிபோலேதுள்ளாதே

முழுவேஷம்போட்டுநீ போசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் சீச்சீபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே-நிலையில்லாதமுதேநீ-கெட்டுப்போகாதே
ஊற்றையுடலைநம்பி ஓதிபோலேநிகளாதே
ஊரைப்பகைத்துக்கொண்டு வேறுடன்மாளாதே
காற்றைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே(கால)

கலியுகச்சிந்து முற்றிற்று.

---

கும்மி

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம்-அப்பனை-பிள்ளை யுதைக்குங்காலம், பண்ணினநன்றி மறக்குங்காலம்-பழி-பாவத்துக் கஞ்சாகலிகாலம். (க)

புருஷனைப்பெண்டீ ருதைக்குங்காலம்-பெற்றப்-பெண்ணைத் தகப்பன் புணருங்காலம, தருமநெறியை மறக்குங்காலம்-கெட்ட-தரு தலைக்கேற்ற கலிகாலம். (உ)

கொண்டபுருஷனைத் திட்டுங்காலம் - இவள்-கூலிகொடுத்துப் புணருங்காலம், முண்டைகள்பிள்ளை பெறுங்காலம்-ஐயா-மானமில்லாத கலிகாலம். (ந)

கட்டினமாது அலையுங்காலமிவன்-காளியுடுத்தித் திரியுங்காலம், புட்டிபுட்டியாய் குடிக்குங்காலமையா-புளுகருக்கேற்ற கலிகாலம். ()

பியேயும்பியெலலும் படித்துவிட்டுமவர்-பிழைக்கசீவன மில்லாமல், கையேந்திபூரிகள் வாங்கிப்பிழைக்கிறார் - கலியுகக்காலமிது வல்லவோ. (டு)

விக்கிரமாதித்தனுளையிலும்-தர்ம-வேதநெறிநளன் காலத்திலும், அக்கிரயமிப்படி கேட்டதில்லை-ஐயோ-அந்தணருத்தியோகஞ் செய்ததில்லை. (சு)

சொந்தபுருஷனைத் திட்டுங்கால - மிவள்-சொல்லாமற் றூய்வீடு போகுங்காலம், கணவன் மனைவியை யழைக்கவந்தா-லவனைக்-கண்டபடியாகத் திட்டுங்காலம் (எ)

கள்ளத்தனமாய் புணர்ந்தபிள்ளை-செத்துக்-கண்டவிடத்திலெறிந்துவிட்டு, நல்லசமுசாரி போலேயினுக்கியே - நாட்டைகெடுக்கும் கலிகாலம். (அ)

புருஷனைப்பெண்சாதி திட்டுங்காலம்-ஐயா-புருஷன்தலையைக் குனியுங்காலம், கணவனைசாட்சியாய் வைத்துக்கொண்டு-இவள்-கருத்தைப்போலே நடக்குங்காலம். (கூ)

சொந்தபெண்சாதிக்குப் பயந்துவிட்டுமவன்-சொல்லாமல்றெயிலிலேறுங்காலம், போனாலும்போகிறு னென்று சொல்லி-இவள்-பெற்றுவளர்க்குங் கலிகாலம். (௧௦)

மெய்யானபத்திர மெழுதுங்காலம்-சாட்சி-பூட்டியேகோர்ட்டில் கெலிக்குங்காலம், தெய்வபொருளைத் திருடுங்காலம்-தீவினைக்கஞ்சாக்கலி காலம். (கக)

அருமையறியா முறட்டுக்கால-மிது-கர்மியைப்போற்றுந் திருட்டுக்காலம், சிறுமணவூர்முனி சாமிசொல்வாக்கியம் சோதித்துப்பார் கலிகாலகுணம். (கஉ)

கும்மிப்பாட்டுகள் முற்றிற்று.

---

தொண்டிச்சிந்து.

ஆறுமாதக்கடங்காரர்-அவருக்கு-அண்ணனென்று உரைக்கலாம் மாறுபாடிகள், காருமாறுகாயலார்கள்-ஊரெங்கும்-தானுய்வலியவந்து கடன்கொடுத்து, பத்துக்கு அஞ்சிவட்டியாம்-அந்தப்-பத்திரமெழுத்துக்கூலி யதுவேறேயாம், தருமத்தின் காசிவேறேயாம்-இப்படி-தந்திரமாயேழைகள் வாயிலடித்து, தட்டுமுட்டு தவலைசொம்பு-பெட்டிமுதல்-தந்ததெல்லாம்வந்தமட்டும் வலித்துக்கொண்டு, வாயிலொருகணக்குரைப்பார்-கணக்கிமேல்-வாங்கிவெகு நாளைப்போலே எழுதிடுவார், பணத்தைக் கொடுத்தனுப்புவார் - வாங்கினவன்-பாதிவழிபோகுமுன்னே சம்மனெடுப்பார். (தந்தின)

இப்படியிவர்களெழுவாம்-நாட்டுகளில்-ஈட்டிக்காரர் கோருமைக் கேட்கபயமாம், சைதாப்பேட்டை துண்டுகளையும்-வைகுண்ட-சல்லாப்போல் கந்தைகளை வாரிக்கொண்டு, வலைப்போல் புடவைகளையும் கவைக்குதவா-டாமேஜி துண்டுதுண்டாய் கிழித்துக்கொண்டு, செம்மண்ணும்பகுடர்களும் - நல்ல-சேருபோலேகுழைத்து தோய்த்துக்கொண்டு, கஞ்சியிலே போட்டுபிழிந்து - கந்தைகளை கருவாடுபோலுணர்த்தி, நாட்டுபுறங் காடுமேடெல்லாம் - கும்பலாய் - நாலைந்துபேருக நுழைந்திடுவார், நெல்லூருவேஷ்டிகளென்பார்-நூலெல்லாம்-நேராக சீமைசாயம் போகாதென்பார், மதுரைப் புடவைகளென்பார்-இது-மாட்டுத்தோலைப்போலிருக்குங் கிழியாதென்பார், கடனுக்குத்தருவோமென்பார்-நித்தியங்-காலணுவிழுக்காடு கொடுங்களென்பார், தெரியாமல்கடனெடுத்தால்-தெருவு-வாசற்படியிற்படுத்து காறிமுழிவார், கொடுத்தகடனைக் கேட்பார் - அவர்-குந்தினயிடத்தைவிட்டு அசையமாட்டார், சூனியங்கள் வைப்போமென்பார்-ஆடுமாடு-சுருண்டிடும் ஏவலிதோ செய்கிறோமென்பார். (தந்தின)

கடன்பத்திரம்.

உலகமறியாதவருஷம் ஒருவருங்காணாதமீ ஒருநாளுமில்லாத தேதியில் ஊரில்லாதஊரிலிருக்கும் தலைகாய்ந்த தாண்டவராயமுதலியார் குமாரன் சனியன்பிடித்த சாம்பசதாசிவமுதலியாருக்கு சரிப்படாத ஊரிலிருக்கும் பித்தம்பிடித்த பேயாண்டிசெட்டியார்குமாரன் பேரில்லாதவன் பிரட்டி எழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன்பத்திரமாவதென்னவென்றால் இப்பவும் என்னுடைய வீட்டிற்குக் கிழக்கு

அவனுடைய வீட்டிற்கு மேற்கு அவளுடைய வீட்டிற்குவடக்கு இவளுடைய வீட்டிற்குத் தெற்கு இந்த நாற்பாங்கெல்லைக்குட்பட நிச்சயித்து சென்னப்பட்டணம் சிகாமணிராசி கும்பினிரூபா-௫௱ இந்த ரூபாய் ஐந்நூற்றுக்கு மாதம் ௱-க்கு ரூபா ௧-க்குவட்டி ரூபா-௫ ஆக ஏறினவட்டியும முதலும் தாங்கள் வேண்டாதபோது கொடுக்காமற் போகக்கடவேனாகவும ஒருசமயம் அப்படிக்குக் கொடுக்கும்படி அப்பியந்தப்பட்டால் தாங்கள் எந்தகோர்ட்டிலாவது போட்டு கோர்ட்டுச்சிலவில்லாமல் அசல்பூஜ்யமாய்ப் போகக்கடவீராகவும் இப்படிக்கு என்னுடைய மனோராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த குதலையில்லாத கடன்பத்திரம். இதற்கு சாட்சி இவனே அவனே எழுதினவனெவனே கையெழுத்து. நடுவீதிநாராயணன.

---

கலிகாலக்கண்ணடி.

தகப்பனுக்குமகனுமழவீ பழக்குங்காலம்
தமயனுக்குதம்பிபுத்தி சொல்லுங்காலம்
குருக்களிருந்தாசனத்தி லிருக்குங்காலம்
கொடுத்தகடன்கேட்பவரை உதைக்குங்காலம்
வலக்கைபிடித்தாசாணி சுற்றிவந்து
மாப்பிள்ளையைமருந்திட்டுக் கொள்ளுங்காலம்
கணக்கருக்குஅடிவழக்கு பேசுங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே. (௧)

வாய்வேகமாகரெயில் லோடுங்காலம்
வாய்பேச்சுத்தந்திவழி பேசுங்காலம்
தாய்பேச்சுபிள்ளைகட்கு விஷமாங்காலம்
தன்மனைவிமனதின்படி நடக்குங்காலம்
நாய்போலவிலைமாதர் பெருத்தகாலம்
நம்பினோமென்றவரைக் கெடுக்குங்காலம்
காதலெனும்மனையாளை வணங்குங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே. (௨)

முண்டைச்சிகள்சந்தோசந்தாய் திரியுங்காலம்
முலைகாட்டிமூசண்டை பரிக்குங்காலம்
தங்கைதனைதமயன்பெண் டாளுங்காலம்
தமயன்பெண்டைதம்பிசிறை யெடுக்குங்காலம்
பருவப்பெண்திண்ணைமேல் உட்காருங்காலம்
பரிகாசவார்த்தைதனைப் பேசுங்காலம்
கருவழிக்கமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே. (௩)

மாமனையேமருமகளும் புணருங்காலம்
மாமியார்மருமகனை மருவுங்காலம்

பெற்றவளும்பிள்ளைதனைச் சேருங்காலம்
பெண்ணாளுந்தகப்பனையே பிணையுங்காலம்
தன்மனைவிதிலோர்த்துணைபோ லிருக்குங்காலம்
தடியர்களும்சந்துசந்தாய் திரியுங்காலம்
காமமெனுங்கருங்கடலில் மூழ்குங்காலம்
கலிகாலமாயிந்தக் காலந்தானே. (௪)

சங்கையற்றுத்திண்ணைமேல் உட்காருங்காலம்
சமுசாரியென்றபேர் நீளுங்காலம்
கொங்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்தனுடன் ஆசைவைத்துப் பேசுங்காலம்
பாட்டிகளைப்பேரனபெண் டாளுங்காலம்
பாலகனைப்பெற்றுதா லாட்டுங்காலம்
களிப்புடனே உடற்பிறப்பை புணருங்காலம்
கலிகாலமாயிந்தக் காலந்தானே. (௫)

கணவனையேமத்தாலே அடிக்கலாச்சு
களிப்புடனே தாய்வீடு சேரலாச்சு
பெண்ணவளும்தாய்வீடு போகலாச்சு
பெற்றவருங்கூட்டியே கொடுக்கலாச்சு
களிப்புடனேகூட்டியே பிழைக்கலாச்சு
கலிகாலமாயிந்தக் காலந்தானே. (௬)

அவுசாரிவுலகத்தில் அனேகமாச்சு
அன்னநடைசாசிகட்கு பிழைப்பும்போச்சு
புவிமீதில்கவிவாணர் பிழைப்பும்போச்சு
புத்தியில்லாமடையருக்கே காலமாச்சு
பருவப்பெண்டாட்டிகளும் பாடலாச்சு
பழுத்தகிழமாப்பிள்ளையை புணரலாச்சு
கற்றவரைக்கல்லாதார் இகழலாச்சு
கலிகாலமாயிந்தக் காலந்தானே. (௭)

பிள்ளைபெற்று ஆற்றோரம் போடலாச்சு
புருஷனடித்தால்விறையைப் பிடிக்கலாச்சு
முண்டைகளும்புருஷனையே தேடலாச்சு
முகமினுக்கிக்கண்டபடி திரியலாச்சு
அண்டைவீட்டுமன்னர்களை கெடுக்கலாச்சு
அடுத்தவரை அன்றைக்கே கொல்லலாச்சு
கொண்டைக்குமினுக்கெண்ணை பூசலாச்சு
கொழுந்தனுக்குபிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள்கண்டவரைப் புணரலாச்சு
கலிகாலமாயிந்தக் காலந்தானே. (௮)

கலிகாலக்கண்ணாடி முற்றிற்று.